©
GOVERNMENT OF TAMIL NADU
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

## EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 130] CHENNAI, TUESDAY, MAY 4, 2010
Chithirai 21, Thiruvalluvar Aandu–2041

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், விழுப்புரம்.**

**விழுப்புரம் மாவட்டம், ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், ஜம்படை ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

[*ந.க.எண் அ2/5830/2007/உ.இ.(ஊ)*.]

**No. VI(2)/163(a-1)/2010.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 205, உட்பிரிவு 11–ல் ஊராட்சிகளின் ஆய்வாளர்/மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, ஜம்படை ஊராட்சி மன்றத்தலைவர் ஊராட்சி நிதியில் படிவம் 19 மற்றும் துணை செலவுச்சீட்டுகள் ஏதும் இல்லாமல் செலவினம் மேற்கொண்டது, வறட்சி நிவாரண பணிகளுக்கு மாவட்ட ஆட்சியர் நிர்வாக அனுமதி அளித்து ஊராட்சி நிதியில் இப்பணியினை துவங்காமலும், போதிய நிதி இருப்பு வைக்காமலும் ஊராட்சி நிதியினை கையாடல் செய்தது. முறைகேடாக செலவினம் மேற்கொண்ட ஊராட்சி மன்றத்தலைவர் என்னும் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி ஊராட்சிக்கு இழப்பினை ஏற்படுத்திய ஜம்படை ஊராட்சி மன்றத்தலைவர் திரு.சி. இராமசாமி என்பவரை பதவி நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமலுக்கு வருகிறது.

விழுப்புரம்,
**2010 ஏப்ரல் 30.**

**இரா. பழனிசாமி,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித் தலைவர்.*



DTP—VI-2 Ex. (130)

**விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய் நல்லூர் ஊராட்சி ஒன்றியம், சரவணப்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

[*ந.க.எண் அ3/2035/2008/உ.இ.(ஊ).*]

**No. VI(2)/163(a-2)/2010.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 205, உட்பிரிவு 11—ல் ஊராட்சிகளின் ஆய்வாளர்/மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, சரவணப்பாக்கம் ஊராட்சி மன்றத்தலைவர் ஊராட்சி நிதியிலிருந்து ரூ. 6,29,716/— க்கு துணை செலவுச்சீட்டுகள் ஏதும் இல்லாமலும், ஊராட்சி மன்ற அங்கீகாரம் இன்றியும் முறைகேடாக செலவினம் மேற்கொண்ட ஊராட்சி மன்றத்தலைவர் என்னும் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி ஊராட்சிக்கு இழப்பினை ஏற்படுத்திய சரவணப்பாக்கம் ஊராட்சி மன்றத்தலைவர் திரு. பு. திருமால் என்பவரை பதவி நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமலுக்கு வருகிறது.

விழுப்புரம்,
2010 ஏப்ரல் 30.

**இரா. பழனிசாமி,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித் தலைவர்.*

**விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய் நல்லூர் ஊராட்சி ஒன்றியம், சரவணப்பாக்கம் ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

[*ந.க.எண் அ3/2035/2008/உ.இ.(ஊ).*]

**No. VI(2)/163(a-3)/2010.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 206, உட்பிரிவு 11—ல் ஊராட்சிகளின் ஆய்வாளர்/மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, சரவணப்பாக்கம் ஊராட்சி மன்ற துணைத்தலைவர் ஊராட்சி நிதியிலிருந்து ரூ. 6,29,716/— க்கு துணை செலவுச்சீட்டுகள் ஏதும் இல்லாமலும், ஊராட்சி மன்ற அங்கீகாரம் இன்றியும் முறைகேடாக செலவினம் மேற்கொண்டு ஊராட்சி மன்றத்தலைவருக்கு காசோலைகளில் கூட்டாக கையொப்பம் இட்டு உடந்தையாக இருந்து, ஊராட்சி மன்ற துணைத்தலைவர் என்னும் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி ஊராட்சிக்கு இழப்பினை ஏற்பட காரணமாக இருந்ததற்காக சரவணப்பாக்கம் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் திருமதி. க. பாக்கியலட்சுமி என்பவரை பதவி நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமலுக்கு வருகிறது.

விழுப்புரம்,
2010 ஏப்ரல் 30.

**இரா. பழனிசாமி,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித் தலைவர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.